தூய ஆவியாரின் துணைகொண்டு ஒருவர் ஒருவரோடு தொடர்பு கொண்டிருக்கின்றனர். கிறிஸ்துவின் ஆட்சி இவ்வுலக ஆட்சி அல்ல (யோவா 18:36) என்பதால் திருஅவையாகிய இறைமக்கள் குலம் எந்த மக்களிடமிருந்தும் உலகைச் சார்ந்த எவ்வித செல்வங்களையும் பறித்துக் கொள்வதில்லை; மாறாக மக்களின் ஆற்றல்களையும் வளங்களையும் பழக்க வழக்கங்களையும் அவை நல்லவையாக இருக்குமளவுக்குப் பேணிக் காத்து அவற்றைத் தூய்மைப்படுத்தி, அவற்றிற்கு வலுவூட்டி உயர்த்துகிறது; இறைமக்களின் அணியாகத் திகழும் இப்பொதுமைப் பண்பு ஆண்டவரின் கொடையாகும். இக்கொடையால் கத்தோலிக்கத் திருஅவை தூய ஆவியோடு இணைந்து தலைவரான கிறிஸ்துவின் கீழ் அதன் எல்லாச் செல்வங்களுடன் ஒன்று சேர்க்கச் செயல் முறையில் எப்போழுதும் முயல்கிறது.

இப்பொதுமைப் பண்பால் திருஅவையின் ஒவ்வொரு பகுதியும் தனக்குரிய கொடைகளைப் பிற பகுதிகளுக்கும், திருஅவை அனைத்திற்கும் தருகின்றது இவ்வாறு ஒருவருக்கொருவர் கொடைகளைப் பகிர்ந்து கொள்வதாலும், ஒற்றுமையில் தம் நிறைவைப் பெற உழைப்பதாலும் திருஅவை முழுவதும் அதன் ஒவ்வொரு பகுதியும் வளர்ச்சியடைகின்றன. இவ்வாறு, இறைமக்கள் பற்பல நிலையினராய் இருப்பதற்கு அவர்களது அலுவல்களே காரணமாக அமையலாம். பலர் துறவற வாழ்வைத் தழுவி, ஒடுங்கிய வழியில் நடந்து, தூய்மை நிலைமை நாடித் தமது முன்மாதிரியால் தம் சகோதர சகோதரிகளைத் தூண்டும்போதும் வாழ்க்கை முறையால் பன்னிலைத் தன்மை எழுகிறது. ஆவிக்குறிய செல்வங்களையும் திருத்தூதுப் பணியாளர்களையும் உலகுசார் வளங்களையும் பொறுத்தமட்டில் திருஅவையின் பல்வேறு பகுதிகள் நெருங்கிப்பிணைந்துள்ளன. ஏனெனில், மக்கட்குல உறுப்பினர்கள் தங்கள் வளங்களைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள அழைக்கப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொருவரும் தாம் பெற்றுக் கொண்ட அருள்கொடையைப் பயன்படுத்தி ஒருவருக்கொருவர் பணிபுரியுங்கள்" (1 பேது 4:10). அனைத்துலக அமைதியின் முன்னடையாளமாக இருந்து அதைப் பேணி வளர்ப்பது இறைமக்களின் பொதுமை சார்ந்த ஒற்றுமை. இவ்வொற்றுமையில் பங்கேற்க மனிதர் அனைவரும் அழைக்கப் பெறுகின்றனர்.

## எண்: 14 கத்தோலிக்க நம்பிக்கை கொண்டோர்

எனவே, திருச்சங்கம் மக்கள் நிறைவாழ்வு பெறவேண்டுமென்றால் பயணம் செல்லும் இத்திருஅவை தேவை என விவிலியம் மற்றும் மரபை அடிப்படையாகக் கொண்டு சங்கம் கற்பிக்கிறது. ஏனெனில், ஒரே இணைப்பாளர் கிறிஸ்து; நிறைவாழ்வின் வழியும் அவரே. அவர் திருஅவையாகிய தம் உடலின் மூலம் நம்மோடு இருக்கிறர். நம்பிக்கை, திருமுழுக்கு ஆகியவற்றின் தேவையை அவரே வெளிப்படையாக வலியுறுத்தி (16:16; யோவா 3:5), எனவே, கத்தோலிக்கத் திருஅவை தேவையான ஒன்றாக இயேசு கிறிஸ்து மூலமாகக் கடவுளால் நிறுவப் பட்டிருக்கிறது என்பதை அறிந்தும் அதில் சேராது இருப்பவர்களும் அதில் நிலைத்து வாழ விரும்பாதவர்களும் நிறைவாழ்வு பெறமுடியாது.

திருஅவையில் இணைந்திருந்தும் அன்பில் நிலைத்திராது "உள்ளத்தாலன்றி "உடலால்" மட்டுமே அதன் மடியில் தவழ்கின்றவர்களும் மீட்புப் பெறுவதில்லை. தங்களது உயர்நிலை தங்கள் சொந்தத் தகுதியாலல்ல, கிறிஸ்துவின் மக்கள் அனைவரும் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். இவ்வருள் கொடைக்குச் சிந்தனையாலும் சொல்லாலும் செயலாலும் பதிலிறுக்காவிடில் அவர்கள் நிறைவாழ்வு அடைவதில்லை; மாறாகக் கடுமையான தீர்ப்புப் பெறுவர்.

தூய ஆவியால் தூண்டப்பெற்றுத் திருஅவையில் சேர வெளிப்படையாக விருப்பம் காட்டும் திருமுழுக்குப் புகுநிலையினர் அவ்விருப்பத்தாலேயே திருஅவையுடன் இணைந்திருக்கிறார்கள். அவர்களைத் தன் பிள்ளைகளாகத் திருஅவை தாயன்போடும் பரிவோடும் அரவணைத்துக் கொள்கிறது.

INTERNAL CIRCULATION ONLY
BUL 5 0 /2023

தயாரித்தவர்கள்: செய்தி ஆதாரம் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு Austin Flannery OP, 1975
திருத்தம்: மாமறைமாவட்ட மெய்ப்புப்பணி மையம் (API)
மின்னஞ்சல் directorapikl@gmail.com



newbee

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
திருஅவையும்
தன்னார்வ தொண்டும்

மாதாந்திர நிகழ்வு:
திருவருகையும்
கிறிஸ்து பிறப்பும்



# LUMEN GENTIUM

## இரண்டாம் வத்திக்கான் சங்க திருஅவை கோட்பாட்டு விளக்கம்

**21 நவம்பர் 1964 திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது**

## எண்: 13 இறைமக்களின் பொதுமைப் பண்பு

கடவுளின் புதிய மக்கள் குலத்தில் சேர எல்லா மக்களும் அழைக்கப் பெறுகிறார்கள். எனவே, ஒருங்கிணைந்த இந்த குலம் கடவுளின் திட்டம் நிறைவேற அனைத்துலகிலும் பரவவேண்டும். சிதறி வாழ்ந்த தம் மக்களை இறுதியாக ஒன்றாய்ச் சேர்க்க தம் மகனை அனுப்பினார்; தலைவராகவும் ஆசிரியராகவும் எல்லோருக்கும் அரசராகவும் குருவாகவும் இருக்குமாறு உரிமையாளராகக் கடவுள் நியமித்தார் (எபி 1:2). இறுதியில், இதற்காகவே ஆண்டவரும் உயிரளிப்பவருமான, தம் மகனின் ஆவியாரைக் கடவுள் அனுப்பினார். திருஅவை முழுவதும் நம்பிக்கை கொண்ட யாவரும், திருத்தூதரும் போதனையின் ஒருமைப்பாட்டிலும் அப்பத்தைப் பிடுவதிலும் இறைவேண்டலிலும் ஒன்றுகூடி 'நிலைத்திருப்பதற்குக் காரணம் இதே ஆவியார்தான் (திப 2:42 கிரேக்க மூலம்).

உலகில் எல்லா மக்கள் நடுவிலும் நிலைபெற்ற இறைமக்கள் குலம் ஒன்றே. இவர்கள் மண்ணுலக இயல்பை அல்ல, ஆனால் விண்ணுலக இயல்பைக் கொண்ட ஆட்சியின் குடிமக்கள். ஏனெனில், உலகமெங்கும் சிதறி வாழும் எல்லா நம்பிக்கை கொண்டோரும்